# யாழ். மறைமாவட்ட மூன்றாம் நிலைக்கல்வி பற்றிய முன்னோக்குகள் : வளர்ச்சிக்கான சிந்தனைகள்

ஆயர் வ. தியோகுப்பிள்ளை
அறக்கொடைப்பேருரை
28.10.2013

பேராசிரியர் மா. சின்னத்தம்பி

யாழ் மறைமாவட்டக் குருக்கள் மன்று
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்



அமரர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

(முன்னாள் யாழ். ஆயர் 1973 : 1992)

# Propositions for Tertiary Education in the Jaffna Diocese : Thoughts for Development

## Bishop Deogupillai
Endowment Lecture
28.10.2013

Prof. M. Sinnathmby

Jaffna Diocesan Priests'Union
Bishop's House,
Jaffna.

# யாழ். மறைமாவட்ட மூன்றாம் நிலைக்கல்வி பற்றிய முன்னோக்குகள் : வளர்ச்சிக்கான சிந்தனைகள்

## அறிமுகம்

ஒரு சமூகத்திலிருந்து உன்னதமான தீர்மானங்களை தொலைநோக்குடன் மேற் கொள்ளக்கூடிய மனிதவளத்தை உருவாக்குவதற்கான கல்வி செயல் முறையாக மூன்றாம் நிலைக்கல்வி முறைமை விளங்குகின்றது. சமூக பொறுப்பு ணர்வுடன் கற்றலும், கற்பித்தலும், ஆராய்ச்சியும் இக்கல்வி மட்டத்தில் முக்கிய மானவை.

தொழில் நெறிமுறைகள், முன்மாதிரியான தனிநபர் ஆளுமைப்பண்புகள் என்பன ஒன்றிணையும் வகையில் புதிய அறிவுத் தொகுதி, நுட்பமான பிரயோக திறன்கள் என்பவற்றையும் சமூக மேம்பாடு பற்றிய நேர் மனப்பாங்கையும் கொண்ட மனிதர்களை உருவாக்கும் செயல் ஒழுங்குகளைக் கொண்டதாக மூன்றாம் நிலைக் கல்வி முறைமை நோக்கப்படுகின்றது.

நேரிய பண்பாட்டுச் சூழலை வளர்க்கும் தொலைநோக்குடனும் நல் ஆளுகையுடனும் மூன்றாம் நிலைக் கல்வி நிர்வகிக்கப்பட வேண்டும். ஒழுங்கும், ஒழுக்கமும், சமூக பற்றுறுதியும் கொண்ட ஆளுகைத்திறன் கொண்ட அமைப்பு ஒன்றுதான் இத்தகைய கல்வியை நன்கு வடிவமைக்கவும் அதன் இலக்குகளுக்கு அமைவாக அதனை மேம்படுத்தவும் முடியும்.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்டம் இத்தகைய தகுதிப் பண்புகளும், வளங்களும், மனித வளமும் கொண்டதாக காணப்படுகின்றது. தனிநபர்களாகவும், அமைப்பாகவும் அது, நின்று நிலைத்திருக்கக் கூடிய கடமை உணர்வு, செயல்த் திறன், சமூக அக்கறை என்பவற்றில் அதிக நாட்டம் கொண்டுள்ளது. மூன்றாம் நிலைக் கல்வி ஏற்பாடுகளில் கவனம் செலுத்தக்கூடிய ஆற்றல்களுடன் மறை மாவட்டம் விளங்குகின்றது. மூன்றாம் நிலைக்கல்வியை நிர்வாகிக்கவும் முகாமை செய்யவும் கூடிய கல்வித் தலைமைத்துவத்தை (Academic Leadership) யும் அது கொண்டுள்ளது.

அரசாங்கத்துக்கு வெளியே பல உயர்கல்வி நிறுவனங்களும் கற்கை நெறிகளும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும் உருவாக்கப்பட வேண்டிய தேவைகள் பல சமூக, பொருளாதார, மற்றும் பண்பாட்டு நிலைமைகளினால் உருவாகி வருகின்றன. இவை தேசிய ரீதியிலும் உணரப்பட்டுள்ளன.

மூன்றாம் நிலைக்கல்வியை புதிய திசைகளிலும், புதிய மாதிரிகளிலும் உருவாக்கி நிர்வகிக்க கூடிய புலமைசார் பங்காளர்கள் தேவைப்படுகிறார்கள். அதிகரித்து வரும் உயர் கல்வி மற்றும் உயர் தொழில் வாண்மைக்கல்விக்குரிய சமூகத் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய ஆற்றல் மற்றும் கடப்பாடுகளுடன் பல பங்காளர்கள் விரும்பப்படுகிறார்கள். தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் உலகத் தரத்தில் இலங்கையில் வளர்வது அவசியம் என்றும் உணரப்படுகின்றது. இந்த மாறிவரும் புதிய நிலைமைகளை உணர்ந்து கொண்டு மறைமாவட்டம் தனது மூன்றாம் நிலைக்கல்வி சார்ந்த கவன ஈர்ப்பை செயல்முறைப்படுத்த முனைவது விரும்பத்தக்கது. உலக ரீதியிலும் கடந்த இருதசாப்த காலமாக அறிவுப்பொருளாதாரம் நோக்கிய பொருளாதார முனைப்புகளும் செயல்முறை களும் வளர்ந்து வருகின்றன. அத்துடன் மூன்றாம் நிலைக்கல்விக்குரிய வளங்க ளும், புலமையாளர்களும், மாணவர்களும், தொழிநுட்பங்களும் பண்புத்தர நியமங் களும் நாடுகளின் எல்லை கடந்து நகரத் தொடங்கியுள்ளனர். உலகமயமாதல் கோட்பாடு கல்வி தொடர்பாக ஏற்படுத்தியுள்ள புதிய பரவல் விளைவுகளாக இவை தென்படுகின்றன.

உலகின் வளர்ச்சி பெற்ற பல்வேறு பல்கலைக்கழகங்களினதும் புலமை யாளர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய இயல்பாற்றிலை மறைமாவட்டம் கொண்டி ருப்பதாலும் நிதி வளத்தை திரட்டக்கூடிய வாய்ப்புக்களை கொண்டிருப்பதாலும், சமூகத் தேவைகளை ஈடுபாட்டுடன் பரிசீலிக்கும் சமூக ஈடுபாடு கொண்டிருப்பதாலும் கத்தோலிக்க மறைமாவட்டம் மூன்றாம் நிலைக்கல்வி முயற்சிகளில் அதிக அக்கறை காட்ட முடியும். ஏற்கனவே அது நடாத்தி வரும் பல்வேறு கற்கை நெறி களை மேலும் பரவலாக்குவதிலும் அதில் வினைத் திறனை உறுதிப்படுத்துவதிலும் கவனம் செலுத்த முடியும். இவற்றுக்கு மேலதிகமாக சமூக மாறுதல்களிலிருந்து மேற்கிளம்பி வருகின்ற புதிய கற்கை நெறிகளுக்கான சமூதாயத் தேவை (social demand) களிலும் அக்கறை காட்ட வேண்டும்.

பாடசாலைக் கல்வி முறைமையின் வெளியீடுகள் மற்றும் விளைவுகளில் (out puts and out comes) விரயங்களும் குறைப்பயன்பாடுகளும் பரவலாக அதிகரிப்பதைக் குறைப்பதிலும் கவனம் செலுத்த முடியும். வேலையின்மையையும் கீழ் உழைப்பை (under employment.) யும் குறைப்பதிலும் பொருத்தமற்ற சமூக, பண்பாட்டு மனவெழுச்சிகளை உருவாக்காத புதிய தெரிவுகளை மேற்கொள்ளு வதிலும் மறைமாவட்டம் தன் கவனக் குவிப்பை வெளிப்படுத்த முடியும். அது தேவையானதாகவும் மறைமாவட்டத்திற்கு சாத்தியமானதாகவும் உணரப்படுகின்றது.

இந்த பின்னணியில் எமது சமூக மட்டத்தில் முன்னெடுக்கக்கூடிய மூன்றாம் நிலைக்கல்வி தொடர்பான வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியமான கற்கைகள் தொடர்பாக இங்கு கவனம் செலுத்தபடுகின்றது.

## கத்தோலிக்க மத ஒழுக்க நியமங்களுக்கு அமைவான உயர் கல்வி ஏற்பாடுகள்

கத்தோலிக்க மத நோக்கிலும், செயல்முறை ஒழுங்குகளிலும் பின்பற்றப் படுகின்ற நியமங்களும் நியதிகளும் பண்புத்தரங்க (Quality) களும் உறுதிப் படுத்தப்படும் வகையிலேயே உயர்கல்வி நிறுவனங்களையும், கற்கைப் பீடங்க ளையும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் கற்கை நெறிகளையும் உருவாக்க வேண்டும். இந்த நிலைமை செயல் ஒழுங்கு (Proesses) களிலும் விளைவு (Out Comes) களிலும் செறிவானதும், இலக்குகளிலிருந்து விலகி விடாததுமான செயற் பாடுகளையும் நடத்தைகளையும் உறுதிப்படுத்த பெரிதும் உதவும்.

கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி, சமூகநலன் பேணல் போன்ற உயர்கல்வி சார் பணி இலக்குகளை (Tasks) யும் உத்தம மட்டத்தில் நடைமுறைப்படுத்துவ தற்கும் அவை பேருதவியாக அமையும்.

கற்கும் மாணவர், கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கற்கை நெறிகள் தொடர்பாக சுதந்திரமான உள்ளடக்கல் கொள்கை (Inclusive policies) களைப் பின்பற்றுவது ஏற்றது. ஆனால் நிர்வாக கட்டமைப்பு, நிர்வாக பொறிமுறை, நிறுவன ஒழுக்க நெறிமுறைகள் தொடர்பாக கத்தோலிக்க சமய பற்றுறுதிகளும், செயற்பாங்கும் வலியுறுத்தப்படுதல் விரும்பப்படுகின்றது. ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி அமைப்புக்களிலும் செயற்பாடுகளிலும் இதே கத்தோலிக்க சமய நம்பிக்கைகளும் அவற்றுக்கு அமைவான செயற்பாடுகளும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதன் நீட்சியாகவே மூன்றாம் நிலைக் கல்வி சார்ந்த புதிய முனைப்புக்களும் அமைதல் வேண்டும்.

மனிதாபிமானம், கிறிஸ்தவ விழுமியம், புலமைசார் சுதந்திரம் (Adcademic Freedom) என்பவற்றை ஒன்றிணைக்கும் வகையில் புதிய உயர்கல்வி நிறுவ னங்களும் கற்கை நெறிகளிலும் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

இத்தகைய புதிய முயற்சிகள் திறமையும் ஆற்றலும் கொண்டவர்களை உருவாக்குவதை செயல் நெறிக்கான இலக்காக கொண்டிருக்கலாம். அவற்றுடன் இணைந்ததாக சமூக நீதியை இயன்றளவு நிலை நிறுத்தும் வகையில் சரிநிகர் (equity) மற்றும் சமத்துவம் (equality) சார்ந்த அணுகுமுறைகளையும், நடை முறைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உள்ளடங்கிய ஆற்றல்களைக் கொண்டுள்ள போதிலும் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டவர்கள், உயர்கல்வி வளர்ச்சிப் பாதைகளில் இணைய முடியாமல்

துண்டிக்கப்பட்ட புவியியல் மற்றும் சமூக மையங்களில் வாழ்பவர்கள், தமது ஆற்றல்களை இனங் காண்பதற்கு வழிகாட்டப்படாதவர்கள் போன்றவர்களை இணைத்துக் கொள்வதற்கான கொள்கைகளும் அணுகுமுறைகளும் நடைமுறைமைகளும் பரிசீலிக்கப்பட வேண்டும். பயன்படுத்தப்படக்கூடிய மானிட, சமூக ஆற்றல்கள் நீண்ட காலம் விரயமாவதை பார்த்துக் கொண்டிருப்பது சமூக நீதியாகாது.

மூன்றாம் நிலைக் கல்வி வழங்குவதற்கான நிறுவன முறைகளிலும் கற்றல் உட்கட்டமைப்புக்களிலும், சூழலிலும் கத்தோலிக்க சமய நம்பிக்கைகளும், பண்பாடும், நெறிமுறைகளும் சிதைந்து விடாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

உயர் கல்வி ஒழுங்கமைப்பு மற்றும் செயலமைப்பு, தொழிற்பாடுகள் தொடர்பாக உயர்ந்த செயலாற்றம், செயல்நிலைகளில் பண்புத்தரம், மாணவர், ஆசிரியர் தொடர்பான வாய்ப்புக்களில் சரிநிகர் மற்றும் சமத்துவம் என்பன உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## உயர் கல்வி மற்றும் தொழில்வாண்மைக் கல்விக்கான முன்னுரிமைகளும் தெரிவுகளும்

கத்தோலிக்க மறைமாவட்டம் தற்போதும் பல மூன்றாம் நிலைக்கல்வி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. பல துணை அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன: பல கற்கை நெறிகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் கற்பிக்கும் விரிவுரையாளர்களும், உயர் தொழில் நிபுணர்களும் மிகச் சிறந்த அறிவுத்தராதரங்களையும் கற்பித்தல் திறன்களையும் கொண்டவர்கள். அவற்றின் கலைத்திட்டங்கள் (Curriculum) புதியனவும் தேவைகளை மையப்படுத்தியனவுமாகும். கற்கும் மாணவர்களும் வாய்ப்புக்களை தேடிக் கொண்டிருந்தவர்களாவர். யாழ்ப்பாண பல்கலைக்கழகம், பாடசாலைகள், மருத்துவமையங்கள், மழலைகள் மற்றும் முதியோர் பராமரிப்பு மையங்கள் போன்ற பல்வேறு கல்வி, மற்றும் பராமரிப்பு துறைகளைச் சார்ந்தவர்களுக்கான உயர்ந்த அறிவு, பிரயோக திறன்கள், நேர்மனப்பாங்கு என்பவற்றையும் தொழில்சார் ஒழுக்கத்தை (professional Ethics) யும் கற்பிப்பதாகவும் தரத்தை மேம்படுத்துவதாகவும் இவை நடாத்தப்படுகின்றன.

## இவை பின்வரும் கற்கைகள் சார்ந்தனவாயுள்ளன

- கொழும்புத்துறை உயர் குருத்துவக் கல்லூரி.
- பொதுநிலையினர் இறையியற் கல்லூரி.
- மறையாசிரியர் பயிற்சி.

- உளவளத்துணைக் கல்வி – அகவொளி.
- கலை மற்றும் அழகியற் கல்வி – திருமறைக் கலாமன்றம்.
- செவிலியர் (தாதியர்) கல்வி – திருச்சிலுவை மருத்துவநிலையம்.
- ஊடகக்கல்வி – ஊடகக்கல்வி நிலையம்.
- பத்திரிசியார் தொழிநுட்பக்கல்லூரி.

இத்தகைய மூன்றாம் நிலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு புறம்பாக ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி மற்றும் முன்பள்ளிக் கல்விமுயற்சிகளிலும் கத்தோலிக்க மறைமாவட்டம் ஈடுபட்டு வருவது கவனிக்கத்தக்கது. இவை ஒன்றுக் கொன்று பரஸ்பரம் இணைந்த கல்விச் செயற்பாடுகளாக விளங்குகின்றன.

தற்போது தொழிற்படும் மூன்றாம் நிலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு நாடுகளில் முன்னணியில் திகழும் அந்தந்த துறை சார்ந்த பல்கலைக் கழகங்களுடனும், உயர்கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து பல நிலைகளிலும் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

கற்றல், கற்பித்தல், பயிற்சி, தொழிலிடப் பயிற்சி, கணிப்பீடு, மதிப்பீடு, ஆய்வுக்கட்டுரைகள் போன்ற எல்லா செயன்முறைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட பண்புத்தரங்களும் (Quality) நியமங்களும் (Norms) வலியுறுத்தப்படுகின்றன. இதனடிப்படையில் வழங்கப்படும் தகைமைச் சான்றிதழ்களுக்கும் தகைமையா ளர்களுக்கும் தர அங்கீகாரம் (Accreditation) உறுதிப்படுத்தப்பட்டு வருவதையும் இங்கு வலியுறுத்த வேண்டும்.

இத்தகைய செயற்படும் மூன்றாம் நிலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவாக்கமாகவும் (Extention) பன்முகப்படுத்தலாக (Diversification ) வும் பலவற் றையும் உள்ளடக்குவதாக (Comprehensiveness) வும் புதிய கல்வி முயற்சிகள் அமைய வேண்டும் என்பது கவனத்திற்குரியதாகும்.

## புதிய தெரிவுகள்

உருவாக்கப்படத்தக்க புதிய மூன்றாம் நிலைக்கல்வி முயற்சிகள் பின்வரும் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் இலக்குகளையும் கொண்டதாயமைதல் விரும்பப்படுகின்றது.

1. நிலவுகின்ற கல்வி ஏற்பாடுகளினால் (பல்வேறு அரச மற்றும் தனியார் துறைசார்ந்த) உருவாக்கப்பட்டுள்ள கல்வி விரயங்களை குறைத்தல் அவசியம். விருப்பங்களுக்கும் ஆற்றல்களுக்கும் முரண்பட்ட தளங்களில் கல்வி கற்பவர்கள் ஈடுபடுவதை தவிர்க்க அல்லது குறைக்க முயலுதல் வேண்டும்.

2. அறிவைச் சான்றிதழ்ப்படுத்தல் (Certification of knowledge ) என்பதற்கான கற்றல் கற்பித்தல் செயன்முறை (Learning -Teaching process) களே தற்போது பரவலாக நிலை பெற்றுள்ளன.

இதற்கு மாறாக ஒழுக்கம், பண்பாடு, சமுதாய பற்றுணர்வு, சுய கற்றல் ஊக்கம் என்பவற்றுடன் செறிவாக ஒன்றிணைக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் சூழலை உருவாக்குதல் வேண்டும்.

வேலை அல்லது செயல்முறை அனுபவங்களுடன் கற்றலும் கற்பித்தலும் இணைக்கப்படுதல் வேண்டும். புதியதும், நுட்பமானதுமான உயர்ந்த அறிவைப் பெறுவதும், தொழில்சார் மென்திறன்கள் (Soft skills ) மற்றும் வன்திறன்கள் (Hard Skills) என்பவற்றை வளர்த்தெடுப்பதும் அவசியமாகின்றது.

3. ஒழுக்கமும், அதியுயர்ந்த கற்றல் நாட்டமும், உள்ளடக்கிய ஆற்றலும் (potential) கொண்ட வறிய குடும்பத்து பிள்ளைகளுக்குரிய மாற்று உயர் கல்வி வாய்ப்புக்களை சமூக நீதியுணர்வுடன் உருவாக்குதலும், படிப்படியாக அவற்றை அகலப்படுத்துதலும் அவசியமாகின்றது.

வறிய குடும்பங்கள், பின்தங்கிய புவியியல் பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்கள் வழிகாட்டமுடியாத நிலையில் உள்ள குடும்பங்கள், சிதைந்த குடும் பங்கள், சமூகரீதியில் ஒடுக்கப்பட்ட குடும்பங்கள், என்பவற்றைச் சார்ந்த பிள்ளை களுக்கான உயர்கல்வி மாற்று வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

4. உலக மயமாதல் மற்றும் அறிவுப் பொருளாதார வளர்ச்சிகளினால் சர்வதேச ரீதியில் உருவாகிவரும் புதிய வாய்ப்புக்களை கையகப்படுத்தக் கூடிய ஆற்றல் களையும், தன்னம்பிக்கைகளையும் கட்டி எழுப்புதல் வேண்டும்.

கைத்தொழில், விவசாயம், விஞ்ஞானம், மருத்துவம், புத்தாக்கம், படைப் பாற்றல், போன்ற பல புதிய துறைகளில் அதியுயர் தராதரங்களை பெறக் கூடிய அசாதாரண மிகை ஆற்றல் கொண்டவர்களை உருவாக்குதற்குரிய கற்கை மாதிரிகளை வடிவமைத்தல் வேண்டும்.

சர்வதேச நிறுவனங்களில் அங்கம் வகிக்கவும், உலக கொள்கை உருவாக் கங்களுக்குமதியுரை வழங்கவும், சர்வதேச அங்கீகாரம் பெறும் புத்தாக்கங்கள் மற்றும் கலைப்படைப்புக்களை உருவாக்கக்கூடியவர்களை வளர்த்தெடுத்தலும் அவசியம். பிரதேச மற்றும் தேசிய எல்லைகளைத்தாண்டி சர்வதேச மட்டத்தில் தமது அறிவுப் பலத்தினால் அங்கீகரிக்கப்படும் நிபுணர்களை உருவாக்கும் அலகும் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

5. குறுகிய காலத்தில் தாமதமின்றி உலகில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப, மின்னியல் (Electronic) கைத்தொழில் மாறுதல்களுடன் ஒன்றிணைக்கக் கூடிய தொழில்நுட்ப மற்றும் உயர் தொழில் நுட்ப கல்வியையும் கற்கை நெறிகளையும் உருவாக்குதல் வேண்டும்.

உலகின் முன்னணி பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்ப பல்கலைக் கழகங்கள், மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்ற ஏற்பாடுகளையும் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

6. சமூக ரீதியில் வளர்ந்துவரும் தீங்குறு பகுதியினர் (Vulnerable Population) தொடர்பாக கவனம் செலுத்துவதும் அவசியம். யுத்தம், சுனாமி, மண்சரிவு, வெள்ளப் பெருக்கு என்பவற்றினால் உடல் மற்றும் உளரீதியில் பாதிக்கப்பட்டவர்களை மேம்படுத்துவதற் கான உளநலன், பராமரிப்பு, வழிகாட்டல், ஆலோசனை, ஊக்குவிப்பு போன்ற பணிகளுக்குரிய தொழில்வாண்மையினர் குழாம் ஒன்றை விஞ்ஞான ரீதியான கற்றல் கற்பித்தல் பொறி முறையின் மூலம் உருவாக்க வேண்டும்.

மனநலம் குன்றியவர்களும், மாற்றுத்திறனாளிகளும் தன்னம்பிக்கை கொண்ட மனித வளமாக மாற்றப்படுவதும் குதூகலமான குடும்பங்களை உருவாக்கும் நம்பிக்கை மிக்கவர்களாக மேம்படுத்தப்படுவதும் அவசியமாகின்றது.

7. கலை மற்றும் அழகியல் கல்வி துறைகளில் அறிவு மற்றும் சான்றிதழ்ப்படுத்தல் என்ற நிலையிலிருந்து ஆற்றுகைத்திறன்களை மேம்படுத்தும் வகையிலும் புதிய நவீன தொழில்நுட்ப மற்றும் மின்னியல் பொறிமுறைகளுடன் அவற்றை ஒருங்கி ணைக்கும் மாதிரிகளிலும் கல்வித் தொழில்நுட்பங்களை முன்னேற்ற வேண்டும். தகவல் தொடர்பாடல் மற்றும் இணையத்துடன் இக்கல்விச் செயல்முறைகள் இணைக்கப்படுவதற்கான முன் முயற்சிகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

8. உலகில் பல முனைகளிலும் உள்ள அறிவியல், தொழில்நுட்ப, பண்பாட்டு முன்னேற்றங்களை எமது மொழிக்கும், சமூகத்திற்கும், பிரதேசத்திற்கும் மாற்று வதற்கும் எமது அறிவாற்றல்களையும், பிரச்சினைகளையும் கண்டுபிடிப்புக்களையும் உலக மயப்படுத்துவதற்கும் பன்மொழி அறிவு அவசியம். மாறுபட்ட பண்பாடு கொண்ட சமூகங்களுடன் ஒத்திசைவுடன் இணைந்து வாழ்வதற்கும் சமூக நல்லி ணக்கம், அமைதி, சமாதானம் என்பவற்றை நிலை பெறச் செய்வதற்கும் பன் மொழிக்கல்வி வளர்க்கப்படுதல் வேண்டும்.

பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான், சீன, இந்திய நாட்டு மொழிகள், ஆங்கிலம், சிங்களம் போன்ற பலமொழிகளை விரும்பிக் கற்கும் இளைஞர் சமூகம் ஒன்று உருவாக்கப்படுதலும் விரும்பப்படுகின்றது.

## தடைகள், வரையறைகள் மற்றும் சவால்கள்

எமது பிரதேசத்தில் உயர் கல்வி மற்றும் தொழில்வாண்மைக்கல்வி (Professional Education) தொடர்பாகவும், புதிய கற்கைகளில் நுளைவது தொடர்பாகவும் முரண்பட்டதும், மாற்றங்களுடன் ஒத்துச் செல்ல முடியாததுமான புலக்காட்சி அல்லது உணர்வு, வலிமையுடன் காணப்படுகின்றது. குடும்ப மட்டத்திலும் கல்வி நிறுவன மட்டத்திலும் சமூக மட்டத்திலும் பல வரையறைகள் காணப்படுகின்றன. உளவியல், மற்றும் சமூக உளவியல் தொடர்பான முற்சாய்வுகள் (Prejudices) பலவும் வலிமையாகக் காணப்படுகின்றன.

உயர் கல்வியின் குறிக்கோள், அதன் செயன்முறை, செல்நெறி, அவை சார்ந்த செலவுகள், அவை தொழிற்சந்தையுடன் கொண்டிருக்கும் தொடர்புகள், உயர் கல்வியில் நிலவும் போட்டித்தன்மைகள், இலங்கைத் தேசிய தகுதி பற்றிய சட்டகத்தின் (Sri Lanka Qualifications Frame Work) நியமங்கள் போன்றன தொடர்பான விழிப்புணர்வு அல்லது புதிய அறிவு தொடர்பான தெளிவின்மை அல்லது முரண்பாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

மரபுவழியான புலமைசார் உயர்கல்வி தொழில், மற்றும் தொழில்நுட்பக் கல்வி (Vocational and technical Education) யுடன் எவ்வாறு இசைவு படுத்தப்படுகின்றது என்பது பற்றியும், தேசிய தொழில் தகைமை மட்டங்கள் (National Vocational Qualification Levels) பற்றியும் கற்றவர்கள் மத்தியில் கூட போதிய தெளிவு உருவாக்கப்படவில்லை. அழகியற் கல்வி தொடர்பாகவும், ஆசிரியர் தொழிலுக்கு வெளியே அதன் பயன்பாடு, வலு மற்றும் வீச்சு பற்றிய விழிப்புணர்வு சமூக ரீதியில் ஒழுங்காகவோ, தெளிவாகவோ வளர்ச்சி பெறவில்லை என்பதையும் உணர்ந்து கொள்வது அவசியம்.

திறன் சார்ந்த கற்கைகள் (Skilled Based Cources) பற்றிய நாட்டம் மற்றும் தொடர் வளர்ச்சி (Follow Up) பற்றிய தெளிவான விளக்கங்கள், கற்கும் மாணவர் மட்டத்திலும், குடும்ப மட்டத்திலும் சரியான முறையில் சென்றடையவில்லை. இதனால் சடங்கு முறையிலேயே உயர்கல்வித் தெரிவுகள் பெரியளவில் இடம் பெறுகின்றன.

உயர்கல்வி சார்ந்த, சமுதாய விழிப்புணர்வு சார்ந்த பயனாளிகள் மட்டத்திலான முன் ஆய்வுகள் அல்லது விசாரனைகள் அல்லது விஞ்ஞான பூர்வமான வழிகாட்டல்கள் எதுவும் வளர்ச்சி பெறவில்லை. பலவீனமான கற்கைகளில் தொடர்ந்தும் பலவீனமான சமுதாயப் பிரிவினர் குவிந்து கொண்டும் வேலையற்ற பட்டதாரிகளாக விரக்தியுடன் வெளியேறிக் கொண்டும் உள்ளனர்.

கேட்பதன் மூலம் கற்றல், அல்லது கற்கை நெறிகளின் குறிப்புக்களை வாசித்து மனனம் செய்வதன் மூலம் பட்டங்களைப் பெறும் கற்றல் பண்பாடு இப்போதும் வலிமையுடன் உள்ளது. குறிப்புக்களை மையப்படுத்திய பட்டங்க (Notes Based Degrees) ளைப் பெறுவதற்கு கூட்டம் கூட்டமாக தனியார் கல்வி நிலையங்களில் குவியும் போக்கில் எவ்வித மாறுதல்களும் இதுவரை ஏற்படவில்லை. மாறுதல்களுக்கான சமிக்ஞைகள் எவையும் தென்படுவதாக வுமில்லை. செய்வதன்மூலம் கற்றல், பிரயோகிப்பதன் மூலம் கற்றல் என்ற மாதிரி களுக்கு சமுதாயக் கிராக்கி (social demand) இன்னும் ஏற்படவேயில்லை. புதியனவாக உருவாகும் கற்கைகள் பற்றிய சமுதாய கவன ஈர்ப்பை பெறுவதற்கான எந்தவித சமுதாய ஏற்பாடுகளும் வளர்ச்சி பெறவில்லை. கல்வி கற்று உயர் அந்தஸ்தில் வாழும் மேட்டுக்குடியினருக்கு (Elites) மாத்திரம் விளங்கும் மாதிரி யில் புதிய உயர் கல்வியின் புதிய போக்குகள் பற்றிய அறிவு மெதுவாகப் பரவுகின்றது.

பயனாளிகளின் பலம், பலவீனம், நாட்டம், எதிர்பார்க்கை, இடர்ப்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய மாதிரிகளில் உயர் கல்வியை வடிவமைக்கும் கல்வி, மற்றும் சமுதாய செயல் ஒழுங்குகள் வளர்ச்சி பெறவே யில்லை. உயர்கல்வி தீர்மானங்களுக்கு உள்ளீடுகளை வழங்கக் கூடிய பயனாளிகள் சார்ந்த தகவல்கள், அவர்களது உணர்வுகள் உரியவாறு பெறப் படுவதில்லை. கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறை (Bottom up approach) க்கு முன்னுரிமை தரப்படவில்லை.

நிபுணர்களும், கொடை வழங்குநர்களும், நிர்வாக பணித்துறையினரும் (Bureaucrats) மூன்று தசாப்தங்களுக்கு முன் உருவாக்கிக் கொண்ட உயர் கல்வி பற்றிய நம்பிக்கைகளிலிருந்து வெளியே வருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

இதனடிப்படையிலான முன்மொழிவுகள் (Proposals) மேலிருந்து கீழ்நோக்கி வடிந்து செல்லும் (Trickle down process) செயன்முறைகள் என்பன உயர்கல்வியின் மையச் சக்தியாக தொடர்ந்து காணப்படுகின்றன.

உள்ளூர் நிலைமைகள், மாறுதல்கள், சாத்தியப்பாடுகள், நெருக்கடிகள் என்பவற்றை அதிக கரிசனையுடன் உள்வாங்கி உயர்கல்வி மாதிரிகளை வடிவமைக்கும் உணர்வும், முக்கியத்துவமும் உலகமயமாதல் அலைகளினால் அதிக தொலைவிற்கு அடித்துச் செல்லப்பட்டுள்ளன. எல்லோரும் எல்லாக்காலங் களிலும் உலக தொழில் வாய்ப்புக்களுக்காகவே உயர்கல்வியை பெறுதல் சரியான தன்று. ஏனெனில் வளர்ச்சி பெற்ற நாடுகளிலும் தொழிலின்மையும், பொருளாதார நெருக்கடிகளும் பரவி வருகின்றன. உள்ளூர் இயல்புகளுக்கும் தேவைகளுக்கும்

ஏற்றதாக புதிது புதிதாக உயர்கல்வி கற்கைகளை வடிவமைக்கும் ஊக்கம் பெரிதாக வளர்ச்சி பெறவில்லை.

உயர் கல்வி கற்பவர்கள் அறிவின் தனியுரிமை (Monopoly in Knowledge) யை கட்டுப்படுத்துவதுபோன்ற உள்நோக்கிலான நம்பிக்கைகளுடன் செயற்படுகின்றனர். இதனால் சுய ஒழுக்கம், சமுதாய நெருக்கடிகள், பண்பாட்டு உன்னதங்கள், வேலைசார் ஒழுக்க நெறிகள் என்பவற்றிலிருந்து உயர்கல்வி கற்பவர்கள் விலகிச் செல்கின்றன; அல்லது அவற்றுடன் ஒன்றிணைய வெட்கப் படுகின்றனர்; தயக்கம் காட்டுகின்றனர். பொருத்தப்பாடற்ற பொய்யுணர்வுகளி லிருந்து உயர் கல்வி கற்போரை மெல்ல மெல்ல மெய்யுணர்வுகளுக்கு நகர்த்த வேண்டும். இவை பற்றிய சமூக பிரக்ஞை தெளிவுடன் வளரவேயில்லை. உயர் கல்வி கற்போரிடம் சுயகணிப்பு (Self-esteem) சுயமுகாமை (Self-management) பற்றிய அறிவும், திறனும், நாட்டமும் ஒழுங்காக வளர்க்கப்படவேயில்லை.

இத்தகைய நடைமுறை நிலைமைகளையும், கல்விப் பண்பாட்டையும் விளக்கிக் கொண்டு புதிய உயர் கல்வி முறைமைகளையும், கற்கைகளையும் வடிவமைக்க வேண்டும்.

## எதிர்கால தீர்மானங்களுக்குரியன

கத்தோலிக்க மறைமாவட்டம் மூன்றாம் நிலைகல்வி செயற்திட்டங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ள விரும்பும் தீர்மானங்களில் பின்வரு வனவற்றையும் பரிசீலிக்க முடியும்.

### 1. கற்கை நெறிகள்

1.1 பல்வேறு மொழிகள் கற்பித்தல்.
1.2 மின்னியலுடன் இணைந்த அழகியல் கல்வி.
1.3 துணை மருத்துவ கற்கைகள்.
1.4 ஊடகக் கல்வியிலான பட்டப்படிப்பு.
1.5 தொழில், தொழில்நுட்ப உயர் கல்வி.
1.6 தொழில் மற்றும் கல்வி வழிகாட்டலுக்கான ஆளணியினருக்கான கல்வி
1.7 உள நலத்துறை சார்ந்த உயர்படிப்பு.
1.8 குழந்தைகள், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கான நலனோம்பு சேவை சார்ந்தகல்வி.
1.9 தொழிலாளர்களுக்கான தொடர் கல்வி மற்றும் பட்டப்படிப்பு.
1.10 அசாதாரண ஆற்றல் கொண்டவர்களுக்கான நுண்மதி விருத்திக் கல்வி.
1.11 சர்வதேச விவகாரங்கள் கொள்கை வடிவமைத்தல் மற்றும் தந்திரோ பாயங்கள் சார்ந்த கல்வி.

1.12 கணக்கியல் மற்றும் முகாமைத்துவ கற்கைகள்

1.13 சுற்றுச்சூழல் தொடர்பான உயர் கல்வி (அனர்த்த முகாமை சார்ந்தனவும் உள்ளடக்கப்படலாம்)

1.14 ஆசிரியர் கல்வி

## 2. ஆராய்ச்சி நெறிமுறைகள்

2.1 சமூகவிஞ்ஞான ஆய்வுகள்

2.2 மானிடவியல் துறைசார் ஆய்வுகள்

2.3 சமூகவியல்சார் ஆய்வுகள்

2.4 அழகியல்சார் ஆய்வுகள்

2.5 தொழில் நுட்பவியல் ஆய்வுகள்

## 3. செயலமைப்பு பொறிமுறை

3.1 தனியார் பல்கலைக்கழகம்

3.2 தொழில்வாண்மை உயர்கல்வி நிறுவனம்

3.3 அழகியல் ஆற்றுகை மையம்

3.4 நலனோம்பு திறன் விருத்திக்கான பயிற்சி மையம்.

## 4. மேலாண்மைச்சபையும் ஆளுகையும்

ஏற்கனவே பேணப்படும் அமைப்பு மற்றும் ஒழுங்குமுறையில் தேவை யானவற்றை ஒருங்கிணைத்தல்

## 5. கற்றல் - கற்பித்தல் சூழல்

5.1 கத்தோலிக்க சமய நெறிமுறைகளை வலியுறுத்தல்

5.2 ஆசிரியர், மாணவர் சுதந்திரத்தை எல்லைகளுடன் அனுமதித்தல்

5.3 சுதந்திரமான கலந்தாய்வுசார் செயலமர்வுகளை ஊக்குவித்தல்

5.4 கற்றல் - கற்பித்தலின் வெளியீடுகளை (Out puts) ஊக்குவித்தல்

5.5 வெளிக்கள அனுபவங்களுடன் கற்றலை ஒருங்கிணைத்தல்

5.6 வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் மாணவர், ஆசிரியர் பரிவர்த் தனை (exchange) களை ஏற்படுத்தல்.

## 6. ஒத்துழைப்பு ஏற்பாடுகள்

கல்லூரிகள், மருத்துவமனைகள் ஊடகமையங்கள், பராமரிப்பு மையங்கள் என்பவற்றுடன் இணைந்து செயற்திட்டங்களை மேற்கொள்ளுதலும் கற்றலும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

கைத்தொழில் மற்றும் வணிக வளாகங்களுடனும் இணைந்த கற்றல் செயல் முறைகளும் தொழில்வாய்ப்புத் தேர்ச்சிகளுக்காக உருவாக்கப்படுதல் வேண்டும்.

## 7. நிதியும் வளங்களும்

- இயன்றளவு சுயநிதிக்கற்கைகளையும் தொழில் வழங்குநர்களின் கொடைக ளையும் அரச சார்பற்ற அமையங்களின் உதவிகளையும் ஊக்குவிக்க முடியும்.
- இலவச கல்வி பெறுவோர் நீண்டகாலத்தில் ஒரு பகுதி செலவுகளை ஈடு செய்ய உதவும் ஒப்பந்த முறைகளையும் பரிசீலிக்க முடியும்.
- வெளியீடுகள், படைப்புக்கள், கண்காட்சிகள் மூலமான வருவாய்களையும் பெற திட்டமிட முடியும்.

## முடிவுரை

மேற்குறிப்பிட்ட எண்ணங்கள் (Ideas) கருத்துக்கள் (Concepts) தொடர்பாக பல நிலைகளில், பொறுப்புதாரர்களுடன் (Stake Holders) கலந் தாய்வு செய்ய வேண்டும். பலபடி நிலைகளில் மாற்றங்களையும் செய்ய வேண்டும். நடைமுறை சாத்தியமான கருத்துக்களும், அபிப்பிராயங்களும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

இத்தகைய செயன்முறைகளினூடாக பெறப்படும் முடிவுகள் மறை மாவட்டத்தின் எதிர்கால மூன்றாம் நிலைக்கல்விசார் முனைப்புக்களுக்கும் முயற்சிகளுக்கும் அடிப்படையாக அமையும் என்று நம்ப வேண்டும்; நம்புவோம்.

**நன்றி**

# Reference


1. Ministry of Higher Education (2013) Sri Lanka Qualifcation Frame Work, MOE, Colombo.

2. Mc Caffery Peter (2004) The Higher Education Manager's Hand book, Routledge Falmer, London.

3. The world Bank (2009) The Towers of learning, The world Bank, Colombo Office, Colombo.
4. National Committee for Formulating a new Education Act for General Education, (2009) New Education Act for General Education in Sri Lanka, National Education Commission, Nugegoda.
5. Daft L.Richard (2002) Management , Thomson- South -Western, OHIO, USA.
6. Tepperman Lorne and James Curtis (2004) Social Problems - A Canadian Perspects, Oxford University Press, ONTARIO, Canada.
7. Evans Linda and Ian Abbott (1988) Teaching and Learning in Higher Education, London.
8. Hoffman M. Allan and Julius J. Daniel (1994) Managing Community and Junior Colleges, College and University Personel Association, Washington.
9. Siri. R.Seluck (2005) Socio Eonmic Status and Academic Achievement : A Meta-Analytic Review of Research, Review of Educational Research Fall 2005, Vol .75 No.3. AERA, Publication, Washington.
10. Blakcden Mark and Mary Hallward-Driemeir (2013) Ready to Bloom? Finance and Development, June 2013, World Bank, New York, USA
11. Czapek Svenja, Detlef Hanne and Coraziegnbalg (2013) Coorperating ateey-level, Development and Coperation No.9.Vol.40 Bonn, Germany.
12. தேசியக்கல்வி ஆணைக்குழு (2003) மனித விருத்திக்கான கல்வி பற்றிய தொலை நோக்கு, தேசியக்கல்வி ஆணைக்குழு, கொழும்பு.
13. தேசிய திட்டமிடல் திணைக்களம் (2010) இலங்கை ஆசியாவில் மலர்ந்து வரும் ஆச்சரியம், அபிவிருத்தி கொள்கை வேலைச்சட்டகம், நிதித்திட்டமிடல் அமைச்சு, கொழும்பு

# யாழ். மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆயர் வ.தியோகுப்பிள்ளை அறக்கொடைப்பேருரைகள்

01. **பொருள்** : பாலம் அமைத்த பணியாளன் 28.07.2008
**உரையாளர்** : அருட்பணி. நீ. மரியசேவியார்
**தலைமை** : அருட்பணி. விக்ரர் பிலேந்திரன்

02. **பொருள்** : தலைமைத்துவம்-21ம் நூற்றாண்டைநோக்கி... ஓர் உளவள ஆன்மீக கண்ணோட்டம் 24.08.2009
**உரையாளர்** : அருட்பணி. சா. ம. செல்வரட்ணம் அ.ம.தி
**தலைமை** : அருட்பணி. அருளானந்தம் யாவிஸ்


03. **பொருள்** : அச்சுவேலி எஸ். தம்பிமுத்துப்பிள்ளை வாழ்வும் பணியும் 07.08.2010
**உரையாளர்** : பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
**தலைமை** : அருட்பணி. அருளானந்தம் யாவிஸ்

04. **பொருள்** : அருளாளர் யோசப் வாஸ்: எதிர்கொண்ட சவால்களும் நிலைநாட்டிய சாதனைகளும் 21.10.2011
**உரையாளர்** : பேராசிரியர் வண. ஞா. பிலேந்திரன்
**தலைமை** : அருட்பணி. ச. இயூஜின் பிரான்சிஸ்

05. **பொருள்** : முந்நாள் சுதேச யாழ் மறைமாவட்ட ஆயர்கள் இருவரதும் மறைக்கல்விப்பணி 29-10-1012
**உரையாளர்** : அருட்பணி. கு.யே.அன்ரனிபாலா
**தலைமை** : அருட்பணி. ச. இயூஜின் பிரான்சிஸ்

06. **பொருள்** : யாழ். மறைமாவட்ட மூன்றாம் நிலைக்கல்வி பற்றிய வளர்ச்சிக்கான சிந்தனைகள் 28.10.2013
**உரையாளர்** : பேராசிரியர் மா. சின்னத்தம்பி
**தலைமைம்** : அருட்பணி. இ.ஸ்ரலின்

# பேராசிரியர் மா. சின்னத்தம்பி



மாரிமுத்து சின்னத்தம்பி அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பேரசிரியராக பணி யாற்றி வருகிறார். கற்பித்தல், நிர்வாகம் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

கொழும்பு பல்கலைகழகத்தில் பொருளியல் பாடத்தில் சிறப்புக்கல்வி கற்று B.A.,B.Phil.(Hons), பட்டங்களைப் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவையும், பொருளியலில் M.A., (ஆராய்ச்சி) பட்டத்தையும், கல்வியின் M. Phil., பட்டத்தையும் பெற்றார்.

கல்வியின் பொருளாதாரம் இவரது சிறப்பான நாட்டத்துக்குரியது. கல்வி முகாமைத்துவம், கல்வித் திட்டமிடல், கல்விமுதலீடு, உலகமயமாகுல் அறிவுப்பு பொருளாதாரம் போன்ற ஆய்வுபிரிவுகள் இவரது முன்னுரி மைக்குரியன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையின் தலை வராகவும், சட்டத்துறையின் தலைவராகவும், பணியாற்றியுள்ளார். அலுவலர் அபிவிருத்தி நிலையத்தின் (Staff Development Centre) பணிப்பாளராகவும், முதுகல்விமாணி கற்கைநெறியின் இணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். கல்வியிலும் பொருளியலிலும் முப்பத்திரண்டு நூல்களையும் ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

2011 இல் கனடாவின் ரொறன்ரோ (Toronto University) பல்கலைக் கழகத்தில் வருகைப்பேராசிரியரக(Visiting Scholar) பணியாற்றியிருந்தார்.

பதினைந்து ஆண்டுகளாக மூதாவை உறுப்பினராக பணியாற்றி வருவதோடு பட்டப்படிப்புக்கள் பீடத்தின் கல்வி ஆய்வுச்சபையின் தலைவரா கவும் பணியாற்றி வருகிறார்.

இவரது இரண்டு நூல்கள் வடக்குக்கிழக்கு மாகணசபையின் உயர் கல்விக்கான சிறந்த நூல்களுக்குரிய பரிசைப்பெற்றிருந்தன.